

# கனிகள் கொடுக்கும் கொடி

- சகோதரி.நிஜா கென்னடி

*ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்.*

*- யோவான் 15 : 6*

இயேசு கிறிஸ்துவே திராட்சைச் செடி. தேவன் தோட்டக்காரர். நாம் கொடிகள். தேவன், திராட்சைக்கொடி அதிக கனிகொடுக்கும்படி அதை பராமரித்து பாதுகாக்கின்றார். எல்லா கொடிகளும் (கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள்) கிறிஸ்துவுக்கு உரிமையானவர்கள்; அவரைப் பின்பற்றி நடப்பவர்கள். அதிக கனிகளைக் கொடுக்கும் கொடிகள், உண்மையான விசுவாசிகள். அவர்கள் கிறிஸ்துவோடுகூட நெருங்கிய உறவில் இருப்பதால், அதிகக் கனிகளைக் கொடுப்பார்கள். கிறிஸ்துவை பின்பற்றி நடக்காமல், பின்மாற்றம் அடைந்தவர்கள், நோக்கமில்லாமல் ஒரு வாழ்க்கை வாழ்பவர்கள். அவர்கள் அதிக கனிகளை கொடுக்க முடியாது. கிறிஸ்துவை முழுமையாக அறிந்துகொள்ளாததினால், மேலோட்டமாக இருந்து, தேவனுக்கு விரோதமான செயல்களைச் செய்து திராட்சைச் செடியாகிய கிறிஸ்துவை விட்டு விலகிப்போகிறார்கள். கனிகொடுக்காதவர்கள் தேவனைப் பின்பற்றாமல், ஒரு குறிக்கோள் இல்லாமல் வாழ்கிறார்கள். அவர்கள் இறந்ததற்கு சமமாகக் கருதப்படுவர். ஒரு கொடியை செடியிலிருந்து



வெட்டியெடுக்கப்படும்போது, அது ஜீவனற்று போகிறது. உலர்ந்து ஒன்றுக்கும் பிரயோஜனமற்றுபோகிறது. அதேபோல நாமும் இயேசு கிறிஸ்துவை விட்டு விலகும்போது, அவருடைய அன்பை இழந்து போகிறோம். நம்மூலமாக மற்றவர்களுக்கு வெளிப்படவேண்டிய அவருடைய அன்பு இல்லாமல் போய்விடுகிறது. அன்புள்ள இருதயம் மற்றவர்களுக்காக பரிதபிக்கக்கூடிய ஈரமுள்ள இருதயம். அன்பில்லாத இருதயமோ, ஈரமற்ற கடின இருதயமாகும்.

## கிறிஸ்துவில் நிலைத்திருங்கள்

*என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் ; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள்.*

*- யோவான் 15 : 4*

செடியிலுள்ள கொடியானது, செடியிலே தொடர்ந்து இருந்தால்தான் கனிகளைக் கொடுக்க முடியும். நாமும் கர்த்தரோடில்லாமல் தனித்திருந்தால் கனி கொடுக்க முடியாது. கர்த்தரோடு சேர்ந்திருக்கும்போதுதான் கனிகளை கொடுக்க முடியும். கர்த்தரோடு கூட உள்ள ஐக்கியத்தில் நாம் அனுதினமும் வளர வேண்டும். தினமும் வேதத்தை வாசித்து தியானித்து, ஜெபிப்பதன் மூலம் தேவனோடு கூட உள்ள உறவில் வளரலாம். வேதத்தை வாசிப்பதனால் மட்டுமல்ல அதன்படி நாம் நடக்க வேண்டும். அநேகர் கிறிஸ்தவர்கள் என்ற பேரைச் சொல்லிக்கொண்டு, பேருக்கு கிறிஸ்தவர்களாக வாழ்ந்து, கிறிஸ்துவின் சுபாவமற்றவர்களாக காணப்படுகிறார்கள். நாம் இப்படியாக இருக்கக்கூடாது. நாம் தேவனோடு சேர்ந்து ஒன்றாக இருக்க வேண்டும். அப்படி கர்த்தரோடு இசைந்திருக்கும்போது, மற்ற மனிதர்களோடு கூட ஐக்கியமாக அன்பாக இருப்போம். கொடிகளாகிய நாம் ஒருவருக்கொருவர் அன்பு கூர்ந்து, செடியாகிய கிறிஸ்துவில் நிலைத்திருப்போம். இயேசுகிறிஸ்து எப்படி மற்றவர்களை நேசிப்பாரோ அதுபோல நாமும் மற்றவர்களை நேசிக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பு நமக்குள் வரும்போது, அவருடைய கட்டளைகளின்படி நாம் நடக்க முடியும். மற்றவர்களையும் நம்மைப்போல் நேசிப்போம். நமக்கு தீங்கு செய்தவர்களையும் மனப்பூர்வமாக மன்னிப்போம். கசப்போடிருக்க மாட்டோம்.

எப்படி நாம் செடியிலுள்ள வேண்டாத பாகங்களை வெட்டி சரிப்படுத்துகிறோமோ அதுபோல கர்த்தரும் நம்மிடமுள்ள வேண்டாத

சுபாவங்களை எடுத்துப்போட்டு நல்ல வளர்ச்சியடைய உதவி செய்வார். தேவன் நம்மிடம் நல்ல குணத்தையும், நல்லொழுக்கத்தையும், விசுவாசத்தையும் உருவாக்குவதற்காக, தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் நம்மை கொண்டு வருவதற்காக நம்மை பயிற்றுவித்து, செயல்படுவதற்கான ஆற்றலைத் தருகிறார். ஆனால் கனி கொடுக்காத கொடியை மரத்திலிருந்து வெட்டிப்போடுகிறார். ஏனென்றால் அதற்கு கனிகொடுக்க தகுதியில்லாதிருந்தும், மரத்திலிருந்து அதை வெட்டாவிட்டால் மரத்திலுள்ள மற்ற நல்ல கொடிகளையும் பாழாக்கி நோயுறச் செய்யும். தேவனுக்கென்று வாழாமல் தன் சுயவிருப்பப்படி வாழ்கிறவர்கள் வாழ்க்கையில் கனிகளை பார்க்க முடியாது. அப்படிப்பட்டவர்கள் கனி கொடுப்பவர்களின் வாழ்க்கையில் நுழைந்து, அவர்களை அசுத்தப்படுத்தி கனி கொடுக்காதபடி தடுத்துவிடுவர். தேவனோடு கூட உள்ள ஐக்கியத்தை இழக்கச் செய்து விடுவர்.

தேவனோடு கூட உள்ள உறவில் மற்றவர்கள் நிலைத்திருக்கிறார்களா இல்லையா என்பதை அவர்கள் வாழ்க்கையில் எப்படி நடந்து கொள்கிறார்கள்? ஒவ்வொரு காரியத்தையும் எப்படி கையாளுகிறார்கள்? அவர்கள் பேசும் வார்த்தைகள் எவ்விதமாக இருக்கிறது? மற்ற மனிதர்களோடு கூட உள்ள உறவில் எப்படி இருக்கிறார்கள்? என்பதை வைத்தே நாம் அவர்களை அறிந்து கொள்ளலாம். மற்றவர்களிடம் அன்போடு நடந்து கொள்கிறார்களா? கோபப்படாமல் சாந்தமாய் இருக்கிறார்களா? மற்றவர்களின் பொருட்கள்மேல் ஆசைப்படாமல், இருப்பதில் திருப்தியோடு இருக்கிறார்களா? சமாதானத்தோடு சந்தோஷத்தோடு இருக்கிறார்களா என்பதை வைத்தே அவர்கள் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கிறார்கள் என்பதை நாமே புரிந்து கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய அந்தரங்க வாழ்க்கையை தேவன் அறிந்திருக்கிறார். வீட்டில் எப்படியாக நடந்து கொள்கிறோம் என்பதையும் தேவன் அறிவார். எப்பொழுதும் கர்த்தர் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வு நமக்கு இருந்தால், நம்முடைய வாழ்க்கை கனிகள் நிறைந்ததாய் இருக்கும். இதுவே தேவனுக்கு பிரியமான ஒரு வாழ்க்கை.





அனுதின வாழ்க்கையில், நாம் சந்திக்கிற பிரச்சனைகள், போராட்டங்கள் மத்தியில், நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கனியற்ற சுபாவங்கள் நமக்குள்ளிருந்து வெளிப்படாதபடி சில வேளைகளில் நாம் பொறுமையிழந்து, அவரசப்பட்டு கோபமடைந்து விடுகிறோம். நிதானத்தை இழந்து விடுகிறோம். மற்றவர்கள் மனதை வேதனைப்படுத்தும் கெட்ட வார்த்தைகளை பேசிவிடுகிறோம். இரக்கமற்று நடந்துகொள்கிறோம். சந்தோஷத்தை இழந்து கவலையோடு சமாதானமில்லாமல் இருக்கிறோம். இவைகள் நம் வாழ்க்கையில் பிரதிபலித்தால் நாம் கிறிஸ்துவுக்குள் வேரூன்றி நிலைத்திருக்கவில்லை என்பது விளங்கும். ஆவியின் கனியாகிய அன்பு நமக்குள் இல்லையென்றால் நாம் ஒன்றும் இல்லை. தீர்க்கதரிசனம் சொல்லும் வரத்தை உடையவர்களாயிருந்தாலும், ஒரு மனிதனுடைய குறிக்கோள், நோக்கம் என்ன என்று அறிந்திருந்தாலும், தேவனுடைய இரகசியங்களை உணர்ந்து, எல்லாவற்றை அறியும் அறிவை உடையவர்களாயிருந்தாலும், மலைகளை பெயர்க்கத்தக்க விசுவாசத்தை உடையவர்களாயிருந்தாலும், எவ்வளவுதான் தர்மங்களைச் செய்தாலும், அன்பு நமக்குள் இல்லையென்றால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அன்பில்லாதவர்கள் தன்னால் எல்லாம் செய்ய முடியும் என்று தன்னைக்குறித்து உயர்வாக எண்ணி தற்பெருமையோடு இருப்பார்கள். அன்புள்ளவர்கள் தங்களை தாங்களே புகழமாட்டார்கள். எளிதில் கோபமடையமாட்டார்கள்; தன்னலமற்றவர்களாக, தனக்கு எதிராக தீமை செய்பவர்களையும் மன்னிக்கிறவர்களாகவும், அநியாயம் செய்பவர்களுக்கு எதிர்த்து நின்று நீதியும், நியாயமுள்ளவர்களாக நடந்து கொள்வார்கள். அன்பில்லாதவர்கள் பிறர்நலம் கருதாமல், சுயநலத்தோடு தனக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுத்து, செயல்பட்டு, கர்வமுடன், அதிக இறுமாப்புடன் மற்றவர்களுக்கு மரியாதை கொடுக்காமல், மனிதர்களின் மதிப்பை அறியாமல், அவர்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்ளாமல், பணத்தையும், பொருட்களையும், பதவியையும் உயர்வாக எண்ணுவார்கள். தன் தகுதிபற்றி தானே வீண்பெருமை கொண்டு, வீண் ஆடம்பரமும், கர்வமும் உடையவர்களாய் இருப்பர். அவர்களது செயல்களும், வழிகளும் பிறருடன் நடந்து கொள்ளும் முறையும் சரியில்லாமல் இருக்கும். நீதியும், நியாயமும், ஒழுக்கமும் இல்லாதவர்களாகவும், மற்றவர்களை கட்டாயப்படுத்தி, வற்புறுத்தி, தனக்கு சுயமாக தோன்றுகிற வழியில் நடக்க வைப்பார்கள். எப்பொழுதும் தன்னுடைய நலத்தையே நாடுபவர்களாக, கொந்தளிக்கும் மனப்பான்மையுள்ளவர்களாக, எரிச்சலுடன், கடும் சினம் கொள்பவர்களாக இருப்பார்கள். தேவ அன்பு நமக்குள் வரும்போது, நம்மை நாமே நேசிக்கும் அன்பாகிய சுயநலமுள்ள தன்மை நம்மை விட்டுபோய்

மற்றவர்களை நோக்கி பார்க்க வைத்து, அவர்களை நேசித்து, உதவிசெய்யும்படியாக வழி நடத்தும். பரிசுத்த ஆவியானவரால் தொடர்ந்து நடத்தப்படும்போது, இயேசுகிறிஸ்துவிலுள்ள ஒப்பில்லாத, எதிர்பார்ப்பில்லாத அந்த அன்பை நாம் மற்றவர்களுக்கு நம்மிடமிருந்து வெளிப்படுத்த ஆவியானவர் உதவி செய்வார். நம்முடைய அனுதின வாழ்க்கையில் தேவ அன்பை வெளிப்படுத்துகிறவர்களாக நாம் நம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நம்முடைய சிந்தனைகளிலும், வார்த்தைகளிலும், செயல்களிலும் தேவ அன்பு நிறைந்திருக்க வேண்டும்.

> *ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ; இப்படிப்பட்ட-வைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.*
>
> *- கலாத்தியர் 5 : 22,23*

## மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள்

யோவான்ஸ்நானகன் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற வந்த ஜனங்களிடம் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளை கொடுக்கும்படி கூறுகிறான் (லூக்கா 3:8). இருதயங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காண்பிக்கும்படியான செயல்களை செய்யும்படி கூறுகிறான். இரண்டு அங்கிகளையுடையவன், ஒரு அங்கிகூட இல்லாதவனுக்கு கொடுக்கும்படியாகவும், உணவையும் இல்லாதவர்க-ளுக்கு பகிர்ந்து கொடுக்கும் படியாகவும் சொல்லுகிறான். வரிவசூலிப்பவர்களிடம், எந்த அளவுக்கு வசூலிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கே வாங்க வேண்டுமென்றும், அதற்கு மேலாக வசூலிக்கக்கூடாது என்றும், போர்ச்சேவகரிடம் மக்களை வற்புறுத்தி பணத்தை வாங்கக்கூடாது, பொய்யாய் குற்றஞ்சாட்டி பணத்தை வாங்கக்கூடாது; உங்களுக்கு கிடைக்கும் வருமானத்தில் திருப்தியாய் இருங்கள் என்றும் கூறுகிறான்.





உண்மையாய் மனந்திரும்பியவர்களின் வாழ்க்கையில் இத்தகைய மாற்றங்கள் காணப்படும். இயேசு கிறிஸ்து நாம் உள்ளார்ந்த மனிதனில் மாற வேண்டும் என்றும், நம் உள்ளம் சுத்தமாக இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறார். வெளியே நல்லவர்களாக நடந்து கொண்டு, உள்ளத்திலே கசப்பையும், கோபத்தையும், வைராக்கியத்தையும் வைத்துக்கொண்டு மாய்மாலம் பண்ணுவதை தேவன் வெறுக்கிறார். எல்லோரிடமும் அன்பாக இருக்க வேண்டும். மனிதரை பிரியப்படுத்தாமல், கர்த்தருக்கு பிரியமான ஒரு வாழ்க்கை வாழ வேண்டும். மனிதர்கள் நம்மை உயர்வாக எண்ண வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு, கர்த்தருக்கு பிரியமானவைகளைச் செய்து, அவருக்கு பிரியமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைக்கொடுங்கள் (லூக்கா 12:33). தேவையிலிருப்பவர்களுக்கு நம்மிடமிருக்கும் பணத்தை கொடுக்க வேண்டும். நாம் கர்த்தரை நம்பாமல் பணத்தை நம்பினால், நாம் கஷ்டப்படுகிறவர்களுக்குக்கூட கொடுக்க முன் வர மாட்டோம். இந்த உலகத்திலுள்ள பணமும், ஆஸ்தியும் நிலைத்திருப்பதில்லை. எல்லாம் அழிந்து போகும். கர்த்தரை நாம் நம்பினால், கர்த்தருடைய வார்த்தையின்படி, கஷ்டப்படுகிற ஏழை ஜனங்களுக்கு நம்மிடமிருப்பதைக் கொடுப்போம். கர்த்தருடைய ஊழியத்திற்கு தாராள மனப்பான்மையோடு மனமுவந்து கொடுப்போம். அப்பொழுது நாம் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறோம். அது நிலைத்திருக்கும். நாம் கர்த்தருடைய வார்த்தையின்படி முழுமனதோடு கொடுக்கும்போது, கர்த்தர் நமக்கு, பல மடங்கு ஆசீர்வாதத்தைத் தருவார் (2 கொரிந்தியர் 9 : 10). மற்றவர்களுக்கு உதவி செய்யும்போது, நாமும் நன்மையைப் பெற்றுக் கொள்வோம். நாம் சுயநலமற்றவர்களாக, இரக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும். மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு சகோதரனாவது, சகோதரியாவது, தேவையோடு, அனுதின ஆகாரத்திற்குக்கூட வழியில்லாமல் இருக்கும்போது, தேவன் உன்னோடுகூட இருக்கிறார் ; உன் தேவைகள் எல்லாம் சந்திக்கப்படும் என்று சொல்லிவிட்டு, எதுவும் கொடுக்காமல் தன் இருதயத்தை அடைத்துக் கொண்டிருந்தால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அப்படிப்பட்டவர்களிடத்தில் தேவ அன்பு இல்லை.

## உண்மையான மனமாற்றம்

சகேயு என்பவன் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின், அவனுக்குள்ளாக ஒரு மாற்றம் ஏற்பட்டது. தனது ஆஸ்தியில் பாதியை

ஏழைகளுக்கு கொடுக்கிறேன்; நான் யாரையாவது ஏமாற்றி இருந்தால்



நான்கு மடங்கு அளவு அந்தப் பணத்தை திரும்பக் கொடுப்பேன் என்று கூறுகிறான். இதுவரை தனக்காக சேர்த்து வைத்தவனிடத்தில், பிறனிடத்தில் அன்பு ஏற்பட்டது. கனிகொடுக்கும் திராட்சைக் கொடியாக மாறினான். நாம் இதுவரை சுயநலமுள்ளவர்களாக வாழ்ந்திருந்தோமானால், அதிலிருந்து மனந்திரும்புவோம். நாம் மற்றவர்களிடத்தில் அன்பு கூருகிறவர்களாக இருப்போமானால், பேராசை, நேர்மையற்ற குணம், மனநிறைவின்மை, திருப்தியின்மை, நீதியும் நியாயமற்ற தன்மை, இரக்கமின்மை, மேட்டிமை ஆகிய இக்குணங்களெல்லாம் நம்மைவிட்டு போய்விடும்.

மனந்திரும்பாமல் பேருக்கு கிறிஸ்தவர்களாக நாம் வாழ்ந்து கொண்டிருந்தோமானால், பாவ வாழ்க்கை வாழ்கிறவர்களாக இருப்போம். மனந்திரும்பினால் நம்முடைய வாழ்க்கையில் மாற்றம் காணப்படவேண்டும். நல்ல கனிகளைக் கொடுக்கிற ஒரு வாழ்க்கையை நாம் வாழ வேண்டும். நல்ல கனிகளைக் கொடுக்காத மரங்களை வெட்டி அக்கினியிலே போடுவார்கள். நாம் கர்த்தரிலும், கர்த்தர் நம்மிலும் நிலைத்திருக்கும்போது, மிகுந்த கனிகளைக் கொடுப்போம்.

***நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார் ; எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.***

*- யோவான் 15 : 8*

இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய இரத்தத்தினால் பாவங்கள் கழுவப்பட்டவர்களே நீதிமான்களாகிறார்கள். அவர்கள் தொடர்ந்து கர்த்தரில் நிலைத்திருக்கும்போது, கனிகளை கொடுக்க முடியும். பரம்பரையாக, தலைமுறை தலைமுறையாக கிறிஸ்தவர்களாக இருந்தாலும், தவறாமல் ஆலயத்திற்கு செல்வதனாலும், ஜெபிப்பதாலும், நன்றி சொல்வதனாலும், காணிக்கை, தசமபாகம் கொடுப்பதினாலும், நல்ல காரியங்களைச் செய்வதனாலும் நாம் கர்த்தரில் நிலைத்திருக்கவும், கனிகளைக் கொடுக்கவும் முடியாது. நமக்கும் தேவனுக்கும் உள்ள தனிப்பட்ட உறவு நிலை எப்படி இருக்கிறது? அவரோடு கூட உள்ள ஐக்கியத்தில் வளர்ந்திருக்கிறோமா? உள்ளார்ந்த மனிதனில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா



என்பதை வைத்துதான் நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறோமா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்தோமென்றால், நம் வாழ்க்கையில் என்ன கஷ்டங்கள், போராட்டங்கள், துன்பங்கள் வந்தாலும், அதை தாங்குவதற்கான பெலனை கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டு, விசுவாசத்தோடு கர்த்தரையே நோக்கிப் பார்த்து கர்த்தரில் நிலைத்திருந்து கனிகொடுக்கிறவர்களாயிருப்போம். மனிதர்களை நம்பி சோர்ந்து போக மாட்டோம். என்ன பிரச்சனைகள் வந்தாலும் அதை எதிர்கொள்ளும் திறனையும், தைரியத்தையும் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொள்வோம். கர்த்தரில் நிலைத்திருக்கிறவர்களின் வாழ்க்கையை பார்த்தோமென்றால், அவர்கள் ஆவியானவரால் நடத்தப்படுவார்கள். கர்த்தருக்கு உண்மையாயிருந்து, அவருடைய வேதத்தின்படி நடந்து, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருப்பார்கள். அவர்களின் வாழ்க்கையில் ஆவியின் கனிகளைக் காணலாம்.

***நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.***

*- மத்தேயு 7 : 19,20*

இயேசுகிறிஸ்து ஒரு உவமையைச் சொன்னார், ஒரு மனிதன் தன் தோட்டத்தில் அத்திமரத்தை நட்டிருந்தான். அவன் அந்த மரத்திலே கனிகள் இருக்கிறதா என்று தொடர்ந்து பார்த்து வந்தான். ஆனால் கனிகள் ஒன்றையும் காணவில்லை. உடனே அவன் தோட்டக்காரனிடம், மூன்று வருடமாய் இதிலே கனிகளைத் தேடினேன் ஒன்றையும் காணோம். அது நிலத்தைக் கெடுக்கிறது. அதனால் அந்த அத்திமரத்தை வெட்டிப்போடும்படி கூறினான். அதற்கு தோட்டக்காரன் இன்னும் ஒரு வருடத்திற்குள் அந்தமரம் கனி கொடுக்கிறதா என்று பார்ப்போம். நான் அந்த மரத்தைச் சுற்றிலும் கொத்தி உரத்தைப்போடுவேன். அடுத்த ஆண்டு அந்த மரம் கனி கொடுக்கிறதா என்று பார்ப்போம். அப்படியும் அது கனியை தராவிட்டால் அதை வெட்டிப் போடலாம் என்று கூறினான் (லூக்கா 13 : 6-9). நாமும் தேவனை அறியாத ஜனங்கள் மத்தியில் வாழும்போது, கனி கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் கனி கொடுக்காதவர்களாக இருக்கும்போது, பிதாவாகிய தேவனிடம், இயேசு கிறிஸ்து, நம்மை அழித்து விடாதபடி, இன்னும் கொஞ்ச காலம் பொறுத்திருந்து பார்க்கும்படி, நமக்காக பரிந்து பேசுகிறார். கனிகொடுக்கிறவர்களாக மாறுகிறோமா என்று காத்திருக்கிறார். கனிகொடாத மரம் நிலத்தைக் கெடுப்பது போல, மனந்திரும்பாத

கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ சமுதாயத்தை கெடுக்கிறார்கள். மனந்திரும்பாதவர்கள் பாவம் நிறைந்த ஒரு வாழ்க்கை வாழ்கிறார்கள். நாம் பழைய வாழ்க்கையை விட்டு மனந்திரும்பும்போது, கனி கொடுக்கிறவர்களாக மாறுவோம். நற்செயல்கள் நம்மிடமிருந்து வெளிப்படும். மற்றவர்களுக்கு நன்மை செய்கிறவர்களாக காணப்படுவோம். நாம் செய்யும் நல்ல காரியங்கள், நமக்கு மகிமையைக் கொண்டு வராமல், கர்த்தருடைய நாமம் மட்டும் மகிமைப்படும்படியாக இருக்கும். நம்முடைய வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்மாதிரியாக, மற்றவர்களை கிறிஸ்துவண்டை வழிநடத்துவதாக இருக்க வேண்டும்.

*மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது.*

*- மத்தேயு 5 : 16*

நாம் மனம்திரும்பிய பின், நம் பழைய சுபாவங்களை களைந்து விட்டு, கிறிஸ்துவின் சுபாவங்களை உடையவர்களாக நாம் மாறுகிறோம், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, ஆவியானவரின் வழி நடத்துதலின்படி அவருடைய சித்தத்தையே செய்வோம். மற்றவர்கள் நம்மிடமுள்ள கிறிஸ்துவின் சுபாவத்தைக் கண்டு, அவர்களும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள காரணமாயிருப்போம். நாம் இயேசு கிறிஸ்துவைப் போல தம்மையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கக்கூடிய அன்புள்ளவர்களாக இருந்தோமென்றால், பிதாவின் அன்பை (தம்முடைய ஒரே குமாரனை, பாவிகளாகிய நம்மை மீட்டு எடுப்பதற்காக கல்வாரி சிலுவையிலே ஒப்புக்கொடுத்தார்) நம்மிலே மற்றவர்கள் காண்பார்கள். இதுவே நாம் பிதாவை மகிமைப்படுத்தும் காரியமாகும்.

கர்த்தருக்குள் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமென்றால், ஆவிக்குரிய போராயுதங்களை பயன்படுத்த வேண்டும். சத்துரு கெர்ச்சிக்கிற சிங்கம்போல நம்மை சுற்றி உபத்திரவங்களை கொண்டு வருவான். நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து, பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்போது, அவன் நம்மை விட்டு ஓடிப்போவான். நாம் சர்வாயுத வர்க்கத்தை அணிந்து கொண்டவர்களாகக் காணப்பட வேண்டும். வேதவசனமாகிய ஆவியின் பட்டயத்தை பயன்படுத்த வேண்டும்.

மாம்சத்தின் கிரியைகளான பொறாமை, கோபம், சண்டை, வாக்குவாதம், மற்றவர்களை அடிப்பது, விரோதங்கள், போன்றவற்றில்



ஈடுபடாமல், எப்பொழுதும் ஜெபத்தில் விழித்திருந்து, ஆவியில் வல்லமையால் நிறைந்து, சாத்தானை எதிர்த்து, வேத வசனமாகிய ஆவியின் பட்டயத்தை பயன்படுத்த அறிந்தவர்களாய் மாம்சத்தின் கிரியைகளை மேற்கொள்ள வேண்டும். சூழ்நிலைகளின் நிமித்தம் நமக்குள்ளே ஏற்படும் முரணான எண்ணங்களை கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டு முறியடிக்க வேண்டும். நம்முடைய அறிவு, சூழ்நிலையைக் குறித்து என்ன சொல்லுகிறதோ அதினிமித்தமே நமக்குள் உணர்ச்சிகள் கொந்தளிக்கின்றன. அதற்கு நாம் அடிபணியாமல், கர்த்தருடைய வார்த்தை அந்த சூழ்நிலையைக் குறித்தும், நாம் என்ன செய்ய வேண்டும் என்றும் சொல்லுகிறதோ அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.

கர்த்தருடைய ஆவியானவர்தாமே நம்முடனே கூட இருந்து, அவரில் நிலைத்திருக்க தயை செய்வாராக. ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிக்கை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா ரூ. 200/-

வெளிநாட்டு வருட சந்தா ரூ. 2000/-

*S. PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD / M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.*

*ICICI* வங்கி கணக்கின் பெயர் : *S. PAULRAJ KENNEDY*

*ICICI* வங்கி கணக்கு எண் : 0350 0150 7744

***எங்களது முகவரி***

எஸ். பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு. இந்தியா.



இந்த பத்திரிக்கையை நீங்கள் படித்துவிட்டு மற்றவர்களுக்கும் படிக்கக் கொடுங்கள். எங்களுக்காகவும், எங்களுடைய ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பிரசன்னமும் எப்போதும் உங்களோடு இருப்பதாக!

***உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்***

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

***இணையதளம் :* www.kennedyministries.org**




www.creflodollarministries.org

இருபது வருடங்களுக்கு முன்னால், ஆண்டவரோடு எப்படி நேரத்தை செலவழிப்பது என்பதைக் குறித்து அறிந்துகொள்ள, அவரைத் தேடினேன். வேதத்திலுள்ள ஆண்டவருடைய வார்த்தையிலிருந்து நான் புரிந்து கொண்டது : வேதத்திலுள்ள ஆண்டவருடைய பிள்ளைகள் (ஆண், பெண்), ஆண்டவருடைய வல்லமையை பார்த்தவர்கள், அவருடைய பிரசன்னத்தைக் கண்டவர்கள், அவருடைய அற்புதத்தை பார்த்தவர்கள், அவரிடமிருந்து பதிலை பெற்றவர்கள் எல்லாம் ஜெபத்திலே அவரோடு நேரத்தை செலவழித்தவர்களே. மோசேயின் வாழ்க்கையில் எல்லாம் நடந்தது, என்ன செய்வதென்றே தெரியாத ஒரு நிலைமைக்கு வந்தபோதே. தரையிலே விழுந்து, ஜெபிக்க ஆரம்பித்தான், அப்பொழுது அவனது வாழ்க்கையில் கர்த்தருடைய வல்லமை காரியங்களை நடப்பித்தது. இதிலிருந்து ஒன்றை நான் அறிந்து கொண்டேன், இப்போதும் இயேசு கிறிஸ்து ஜெபித்துக்கொண்டிருக்கிறார். நான் வெளிநாடுகளுக்கு சென்று திரும்பும்போதெல்லாம் ஒன்றை கவனிக்க ஆரம்பித்தேன். அவர்களெல்லாம் அதிகமாக ஜெபிக்கிறார்கள். இன்றைக்கு அவரது சத்தத்தை கேட்பது அவசியம்.

என்னுடைய பிள்ளைகள் என்று சொல்பவர்கள் தங்களைத் தாழ்த்துவார்கள், ஜெபிப்பார்கள், பாவத்திலிருந்து மனந்திரும்புவார்கள். நான் பரலோகத்திலிருந்து அவர்களது ஜெபத்தை கேட்டு, அவர்களது பாவங்களை மன்னித்து, அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் இன்று தம்முடைய பிள்ளைகளுக்கு சொல்லுகிறார். நம்முடைய பலத்தினால், பராக்கிரமத்தினால் ஒன்றும் நடக்கப் போவதில்லை. அவரது ஆவியினாலேயே எல்லாம் ஆகும்.

நான் (க்ரஃப்லோ டாலர்) இந்த சபையை ஆரம்பிக்கும்போது என் தகப்பனார் என்னிடம், எங்கிருந்து ஜனங்கள் இங்கு வரப்போகிறார்கள்? என்று கேட்டார். பரிசுத்த ஆவியானவர், ஜனங்களைக் கொண்டுவரப் போகிறார் என்று பதில் சொன்னேன். என்னைவிட படித்தவர்கள் உண்டு. என்னைவிட அனுபவம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு நான், கர்த்தர் என்னை ஆசீர்வதித்திருப்பதைப் பார்க்கிறேன். இது எப்படி? ஒரே பதில்தான் : நான் ஜெபிக்கிறேன், கீழ்ப்படிகிறேன். அதுதான் இந்த வளர்ச்சியைத் தந்தது. இது என்னுடைய பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும், பிரசங்கத்தினாலும் அல்ல.



இந்த உலகத்திலே, என்னைக் காட்டிலும் நூறு மடங்கு நன்கு பிரசங்கிக்கிறவர்கள் இருக்கிறார்கள். சபையை நான் ஆரம்பித்த நாட்களில் என்னிடத்தில் பணம் கிடையாது. கர்த்தர் என்னிடம் சொன்னது : ஜெபம் பண்ணு. வாடகைக்கு இடம் எடுத்தோம், ஜெபித்தோம். கர்த்தர் செய்வார் என்று அவரை நம்பினோம். இந்த சபை வளர ஆரம்பித்தது. இதற்கு நான்தான் காரணம் என்று யாரும் சொல்லிக்கொள்ள முடியாது. கர்த்தருடைய ஆவியானவர் உங்களது குடும்பத்தில், சபையில், பொருளாதாரத்தில் சில காரியங்களை செய்ய விரும்புகிறார். நம்மை ஜெபிக்க அழைக்கிறார். கிறிஸ்தவர்கள் சபை ஆராதனையில் நேரம் செலவழிக்கிறோம். பாடகர் குழுவிலிருந்து பயிற்சி செய்வதில் நேரம் செலவழிக்கிறோம். ஆனால், ஜெபத்தில் தரித்திருப்பதில் நாம் நேரம் செலவழிப்பதில்லை. ஜெபிப்பதற்கான வாஞ்சை இல்லை. மாம்சபிரகாரமாக அதை நிறைவேற்ற முடியாது. கர்த்தருடைய ஆவியானவரே நமக்குள் அந்த வாஞ்சையை பிறப்பிக்க வேண்டும். இந்த தெய்வீக வாஞ்சையை பரிசுத்த ஆவியானவர்தான் நம்முடைய இதயத்தில் உண்டாக்க வேண்டும். ஜெபிக்கிற வாஞ்சையைத் தரும்படி பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள்.

ஜெபம் என்பது, தேவன் ஏற்கனவே அவரது வேதத்திலே சொல்லியிருப்பவற்றை அவரிடம் சொல்லி உடன்படிக்கை செய்வதே. நமக்கு என்ன தேவை என்று நாம் கேட்பதற்கு முன்னமே அவருக்குத் தெரியும். அப்படியென்றால், எனக்கு தேவையானதை ஏன் அவர் தராமல் இருக்கிறார்? என்று நீங்கள் நினைக்கலாம். ஏன் நான் எனக்காகவும், மற்றவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும்? என்றும் நீங்கள் நினைக்கலாம். அவருக்குத்தான் ஏற்கனவே தெரிந்திருக்கிறதே, நான் ஏன் ஜெபிக்க வேண்டும்?

அதற்கான பதில் : ஆதியாகமம் 1 :28ல் தேவன் சொல்லுகிறார் : பூமியிலே சகல அதிகாரத்தையும் மனிதர்களாகிய நமக்கு தேவன் கொடுத்திருக்கிறார் என்று. அதனால் இந்த பூமியிலே எதைச் செய்ய வேண்டுமென்றாலும் மனுஷனுடைய அங்கீகாரம் வேண்டும். தேவனும், சாத்தானும் மனுஷர்களாகிய நாம் இடங்கொடாமல் எதையும் செய்ய முடியாது. நாம் ஜெபிக்கும்போது, பரலோகத்தை பூமியிலே இடைபட வைக்கிறோம். நாம் பூமியிலே எதை கட்டுகிறோமோ அது பரலோகத்திலேயும் கட்டப்பட்டிருக்கும்.

ஜெபிப்பதற்கு மனதில்லையா? பாட ஆரம்பியுங்கள். அப்படி நீங்கள் தேவனுக்கு முன்பாகப் பாடும்போது, வல்லமையான காரியங்கள் நடக்க ஆரம்பிக்கும். இன்று கிறிஸ்தவர்கள் தங்களது அறிவு, முயற்சிகள், தாலந்துகளை வைத்து காரியங்களை நடத்த நினைக்கிறார்கள். ஜெபத்தின் மூலமாகவே காரியங்கள் நடக்கும்.

நாமே தேவன் வாழும் ஆலயம். அதை பரிசுத்தமாக வைப்போம். சீராக வைப்போம். நம் சரீரம் ஒரு ஜெப ஆலயமாக இருக்கட்டும். நம் ஜெபத்திற்கான பதிலையும், அற்புதங்களையும் காண்போம்.



# கேட்கிறதைக் கவனியுங்கள் (7)

*என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?*

*என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன்.*

*ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் ; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.*

*என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான் ; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது ; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.*

*- லூக்கா 6: 46 - 49*

இங்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்வது என்னவென்றால், என்னை ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்கின்றீர்கள் என்கின்றார். அதாவது, என்னை நான் ஆளவில்லை, என் இஷ்டப்படி நான் நடப்பது இல்லை, என்னை ஆள்பவர் நீரே என்கிறீர்கள் என்று குறிப்பிடுகிறார். ஆனால், அவர் சொல்லுவதின்படி நடப்பதில்லை என்கிறார்.

அவருடைய வார்த்தையைக் கேட்டு, அதின்படி நடப்பவன், கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்ட வீட்டைப்போல உறுதியான, தீர்க்கமான, தெளிவான எண்ணங்களுள்ள வாழ்க்கையை வாழ்பவனாக இருப்பான். வாழ்க்கையில் எப்பேர்ப்பட்ட சோதனைகள், போராட்டங்கள், பிரச்சனைகள் வந்தாலும், தடுமாற மாட்டான். ஏனென்றால், அவனுடைய வாழ்க்கையில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது, ஏன் அப்படிப்பட்ட சூழ்நிலை வந்துள்ளது, அவன் என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம்



அவன் ஏற்கனவே வேதத்திலிருந்து படித்து தெரிந்திருப்பான். அதனால் கலங்கிப் போகவோ, சோர்ந்துபோகவோ மாட்டான். சூழ்நிலையைக் காட்டிலும் தேவன் பெரியவர் என்பதை அறிந்து வைத்திருப்பான். வேதத்திலே தேவன், தம்முடைய பிள்ளைகளையெல்லாம் இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே எப்படி நடத்தினார் என்பதை அறிந்திருப்பான்.

அந்த போராட்டத்தின் முடிவிலே கர்த்தரே ஜெயம் பெறுவார் என்பதை முன்கூட்டியே அறிந்திருப்பதினால் கலங்கிப் போகாமல், அதைரியப்படாமல், திடமாக இருப்பான். கர்த்தரைக் குறித்தும், அவருடைய குணாதிசயங்கள் குறித்தும், அவருடைய நடத்துதல்கள் குறித்தும் அறிந்து வைத்திருப்பதினால், எப்பொழுதும் அவரையே சார்ந்திருப்பான். அவருடைய சித்தத்தையே செய்பவனாக இருப்பான். தன்னுடைய பலத்தையோ, பராக்கிரமத்தையோ நம்பாமல் கர்த்தரையே நம்பி வாழ்பவனாக இருப்பான். கர்த்தர் சொன்னபடி, நாசியில் சுவாசமுள்ள எந்த மனுஷனையும் நம்பாமல் இருப்பான். நாசியில் சுவாசம் நின்று போகும்போது அந்த மனிதன் இல்லாது போவான். மேலும் தான் வாழ வேண்டுமென்பதில்தான் அந்த மனுஷன் கவனமாக இருப்பானேயொழிய இந்த மனுஷன் வாழ வேண்டுமென்பதற்காக தன்னையே கொடுக்கும் அளவிற்கு அன்பு செலுத்துகிறவனாக இருக்க மாட்டான். நம் தேவன் ஒருவரே தன்னையே ஜீவபலியாக நமக்காக ஒப்புக்கொடுத்தார் என்பதை சரியாக அறிந்து வைத்திருப்பான்.

ஆனால் அவருடைய வார்த்தையைக் கேட்டும், அதின்படி நடக்காதவன் வாழ்க்கையில் போராட்டம், சோதனை, பிரச்சனை வந்தவுடன், தடுமாறிப்போவான். என்ன நடக்கிறது, ஏன் நடக்கிறது, எதனால் நடக்கிறது என்பதையெல்லாம் அவனால் அறிந்து கொள்ளவோ, புரிந்துகொள்ளவோ முடியாது. ஏனென்றால், வேதத்தின்படி வாழ்ந்திருந்தால் இவைகளெல்லாம் அவன் வாழ்க்கையில் ஏன் சம்பவிக்கிறது என்பதை அறிந்திருப்பான். ஒன்று, கர்த்தருடைய வார்த்தையின்படி வாழும்போது இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வழி தெரிந்திருக்கும். அதனால் பாதுகாப்பு இருக்கும். மற்றொன்று எதிர்பாராத போராட்டமோ, சோதனையே, பிரச்சனையோ வரும்போது, கர்த்தருடைய வார்த்தை சொல்லும் ஆலோசனையின்படி செய்து, சூழ்நிலையை மேற்கொள்ளலாம். இந்த பூமியில் நடப்பதெல்லாமே கர்த்தருடைய பார்வைக்கு மறைவானதல்ல. யோசனையில் பெரியவர், ஆலோசனையில் ஆச்சரியகரமானவர் அவர். நாம், அவருடைய மேலான யோசனையின்படியும், ஆலோசனையின்படியும் வாழ்ந்தால் இந்த உலகத்தை ஜெயிக்கலாம். சூழ்நிலை நம்மை ஆள முடியாது. சூழ்நிலையைக் காட்டிலும் பெரிய தேவன் நம்மை, சூழ்நிலையை ஆள வைப்பார். வார்த்தையைப் பிடித்துக்கொள்ளுங்கள். உலகத்தை ஆளுங்கள்.

***- தொடரும்***